# எரித்திரியா

## தேசத்தின் பிறப்பு



இரும்பொறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரித்திரியா தேசத்தின் பிறப்பு

இரும்பொறை

முள்ளிவாய்க்கால் பதிப்பகம்
61 பெருமாள் சாமி நகர்,
பி.கே.புதூர்
கோயம்புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© முள்ளிவாய்க்கால் பதிப்பகம், முதல் பதிப்பு, மே 18, 2010,
தி.ஆ.2041
61 பெருமாள் சாமி நகர், பி.கே.புதூர், கோயம்புத்தூர்.
அலைபேசி: 99944 34634
மின்னஞ்சல் : tamilarasanpoy@gmail.com

**எரித்திரியா தேசத்தின் பிறப்பு**

ஆசிரியர் : இரும்பொறை
அட்டை வடிவமைப்பு : தமிழ் முருகேசன்
மறுதோன்றி அச்சு : சபரி அச்சகம், கோவை.
விலை : ரூ.15

Mullivaikal Pathippagam, First Edition, may 18,2010,T.Y.2041
61, Perumal samy Nagar, B.K.Pudur, Coimbatore
Mobile : 99944 34634
email: tamilarasanpoy@gmail.com


ERITREA : Thesathin Pirapu

Author : Irumporai
Wrapper Design : Tamil Murugesan
Offset Print : Sabari Printers, Cbe.
Price : Rs.15/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரித்திரியா கடந்தும் ஈழம் கடந்தும்
இன்று வரை புரட்சிகரப் பிம்பத்தை
இழக்காத...
எதன் பொருட்டும் கியூப நலன்களை
விட்டுக்கொடுக்காத...
கியூப தேசியவாதி காஸ்ட்ரோவுக்கு...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகுமுன்....

ஈழம் முடிவுக்கு வந்துவிட்டதாக எதிரிகளும் இன்னபிற இசங்களைச் சுமப்பவர்கள் எனப் பலரும் வெளியே காட்டமுடியாத குதூகலிப்போடு வலம் வருகையில் நம்மவர்களுக்கோ வாழ்க்கையே சலித்துப்போய் இன்றோடு ஓராண்டு முடிகின்றது. நீதியும் சனநாயகமும் போராட்டமும் பொருள் களைந்த வெற்று ஒலிக்குறிப்புகளாகி நம்மவர்களின் அறிவும் மனமும் ஒருசேர ஓலமிடுகிறது. தமிழீழத் தேசியத்தலைவரின் மெழுகுப் பொம்மை பார்த்து இது அவரில்லை என அறிவு சொன்னாலும் உள்கசியும் வேதனையும் வலியும் கொஞ்சமல்ல.

போராட்டமும் விடுதலையும் அதன் அச்சு அசலான பொருளில் புரிந்துகொள்ளப்பட்டால் இத்துயரம் வேடிக்கையானது என நமக்குப் புரிய வரலாம். இலட்சக்கணக்கில் கொடூரமாகக் கொல்லப்பட்ட ஈழத்தவர்களின் எண்ண அலைகள் இப்புவிப்பந்தின் திக்கெங்கும் திரிந்துகொண்டிருப்பது உண்மையெனில் நமக்கு சலிப்போ செயல்முடக்கும் சோர்வோ எழத்தேவையில்லை. உணர்வுவயப்பட்ட தமிழ் மனச்சான்றினை ஆற்றிக்கொள்ள அல்ல நாம் கூறுவது. குயில் கூவும், மயில் அகவும், கரும்பு இனிக்கும் என்பது போன்ற எல்லாக் காலத்திற்குமான உண்மைகளின் கனம் ஈழப்போராட்டத்தின் ஆழத்திலும் உண்டு என்பதை நாம் அறிந்தாகவேண்டும் என்னும் தெளிவுக்காகத்தான்.

'எரித்திரியா' இன்று தமிழ் மனங்களெங்கும் நீங்காத ஒரு பெயர்ச்சொல். வெள்ளை ஆங்கிலேய அநாகரிகர்களால் உலகெங்கும் பிடித்துச் செல்லப்பட்டு உழைக்கின்ற விலங்குகளாய் விற்கப்பட்ட இனங்கள் இரண்டு. அவர்கள் தமிழரும் கருப்பரும்.

ஆதிக்கத்தின் வலியும் வேதனையும் எந்த வெள்ளையன் வந்து பாடம் நடத்தி புரிந்துகொள்ளும் நிலையில் நம் வரலாறு இல்லை. எரித்திரியாவும் தமிழீழமும் கைகுலுக்கிக்கொள்ளும் கருத்தியற் புள்ளி இதுதான். அந்தவகையில் எரித்திரியா நமக்குப் பாடம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் வெளிநாட்டு எதிர்ப்பு மட்டுமல்ல தம் சொந்தக் கசடுகளையும் விடுதலை நெருப்பில் எப்படி எரித்துக்கொள்வது என்பதற்கும் எரித்திரியப் பாடம் வலிமையானது. சாதியத்தின் நச்சை முறித்துக்கொண்டுதான் விடுதலை அமிழ்தம் கடைந்தெடுக்கப்பட முடியும் என்பதைப்புரிந்துகொள்ள எரித்திரியாவே நமக்கு புத்தகம். கற்போம். விடாது கற்போம். எதிரிகள் துரோகிகள் சூழக் கற்போம். அறிவின் சூட்டில் அடிமைப் பூட்டு அறுந்துவீழட்டும்.

அடர்த்தியான மூடநம்பிக்கைகளைவிட பனிப்படலமாய்த் தென்படும் அறிவுப்பூர்வ நம்பிக்கை நமக்கு கைகொடுக்கும் என்பது எம் எளிய நம்பிக்கை.

எண்ணற்ற எளிய எரித்தியர்களைப் பலிதந்து விண்ணுக்கும் மண்ணுக்கும் எழுந்து நிற்கும் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி தம் தேசத்தின் விடுதலைக்கனியைப் பறித்த கதை இந்தநேரத்தில் சொல்லப்படுவது பொருத்தமானதே.

முள்ளிவாய்க்காலின் பொம்மை விளையாட்டை வேடிக்கையாகக் கடந்து நாளை எழப்போகும் தமிழீழம் எரித்திரியச் சாயலில் இருக்கும் என்பது நம் அனுமானம்.

எமது பதிப்பகத்தின் வழி முதல் நூலாக இதைக் கொண்டு வருவதால் பெருமை அடைகிறோம். இந்நூல் வெளிவர வழிகாட்டிய தமிழ்நேயன், இளங்கோவன்... வாழ்க்கைத்துணை உஷா...நண்பர்கள் ஹரி பிரதீப், கணேஷ் பிரபு... என அனைவருக்கும் நன்றி.

நம்பிக்கையுடன்...

முள்ளிவாய்க்கால் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரித்திரியா - கடல் நில நாயகர்கள்

கடலின் நாயகர்கள் அல்லது கடல்-நில நாயகர்கள் என செம்மாந்து தம்மை அழைத்துக்கொண்ட எரித்திரிய மண் ஆப்பிரிக்காவின் மகுடத்தில் ஒரு வேறுபட்ட தனித்துவமிக்க பழம்பேரினப் பெருமிதத்தில் ஊறித்திளைத்த ஒரு தேசம். இருண்ட கண்டமாய் வெள்ளையின அநாகரிகர்களால் ஏகடியம் செய்யப்பட்ட ஆபிரிக்காவின் பகுதியான எரித்திரியா மண்வளமும் மக்கள் வளமும் மிக்கதொரு நிலமாகும். மாறுபட்ட அறமதிப்பீடுகளையும் மத விழுமியங்களையும் பெற்ற எரித்திரிய மக்களைப் போலவே அம்மக்களது தேசமும் வேறுபட்ட,வளம் மிக்க நிலப்பகுதிகளை கொண்டிலங்குகிறது.

பொதுவில் மேட்டுநிலப்பகுதி, தாழ்நிலங்கள், மேற்குப்பகுதிச் சமவெளிகள், வடதிசை மலைப்பகுதி என நால்வகையாக எரித்திரிய நில அமைப்பைப் பிரித்துக் கூறலாம். ஏறத்தாழ 1000 கி.மீ நீளமுள்ள கடல்பரப்பும் சிறிதும் பெரிதுமான நூற்றுக்கும் மேற்பட்ட தீவுப்பகுதிகளும் இதில் அடக்கம். எரித்திரிய எல்லைகளாக வடக்கு, வடமேற்குமாக சூடானும் தெற்கே எத்தியோப்பியப் பெருந்தேசமும் தென்கிழக்கில் ஜிபுத்தி தேசமும் அமைந்துள்ளன. உ ல க வரைபடத்தில் உலகப்பெருவல்லரசுகளின் கவனம் வெகுதீவிரமாக குவிக்கத்தக்க ஒரு பகுதியில் அமைந்துள்ளமையே எரித்திரியாவின் வரமும் சாபமுமாகும்.

## கடல்-நில நாயகர்கள்

மதவழியில் கிருத்துவர்களும் இசுலாமியர்களும் சற்றேரத்தாழ சம அளவில் நிறைந்துள்ள தேசம் எரித்திரியாவாகும். ஒன்பது தேசிய இனங்களின் வேற்றுமையின் இழைகளிலிருந்து எரித்திரிய தேச ஒற்றுமை கிளைவிட்டது என்பது ஒரு வரலாற்று விந்தை. டிக்ரி, குனோமா, நாரா மற்றும் அரபி ஆகியவை எரித்திரிய மக்கட் பிரிவுகளின் தாய்மொழிகளாக விளங்குகின்றன. மொழியும் மதமும் இன வேறுபாடும் எரித்திரியாவின் தொன்மையிலிருந்தே தொடர்கிற இணக்கம் மிக்க பண்பாட்டின் காரணமாக எரித்திரிய தேச உருவாக்கத்தில் எதுவித ஊறும் விளைவிக்கவில்லை. மாறாக அந்த வேறுபாடுகளிலிருந்து ஊட்டம் பெறத் தக்கவகையில் எரித்திரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்போராட்டம் வடிவம் பெற்றது.

## வரலாறு

எரித்திரியா தமிழகம் போன்றே ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாறு கொண்ட தேசம். தொல்பழங்கால மனிதகுல முன்னோர் வாழ்ந்த தடயங்கள் எரித்திரியாவில் கண்டெடுக்கப்பட்டதும் இதுவரைக்கால கண்டுபிடிப்புகளில் இத்தடயங்களே தொன்மை யானதென கருதும் ஆய்வாளர் கருத்தும் எரித்திரியாவின் மனித வசிப்புப் பழமைக்கு மேலும் சான்றாகின்றன.

அனைத்து ஆப்பிரிக்க தேசங்களைப்போலவே எரித்திரியாவும் குலப்போர்களுக்கும் போர்நாயகர்களுக்கும் பஞ்சமில்லாத மண்தான்.

## சூயஸ் கால்வாய் திறப்பும் நவீனத் துயரங்களின் தொடக்கமும்

1869 ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது.1860 களிலிருந்து இத்தாலி ஆப்பிரிக்க கண்டத்தில் தன் பேரரசை விரிவுபடுத்தும் திசையில் தீவிரமாக இயங்கத்தொடங்கியதன் விளைவாக, செங்கடல் சூழல் மேலும் மேலும் புவிசார் அரசியலின் முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருந்தமை ஆகியவை அக்கால கட்டத்தில் எரித்திரியாவை குடியேற்றமாக ஆக்கித்தீரவேண்டிய வேட்கையை இத்தாலி கைக் கொள்ள வைத்தது. அண்டைநாடான எத்தியோப்பிய தேசத்திலும் தன் ஆதிக்கத்தை நீட்ட இத்தாலிக்கு எரித்திரியா தக்கதொரு பின்களமாகப் பயன்படுத்திடவும் திட்டங்கள் தயாராயிருந்தன.

1860 களில் தொடங்கி கசாப் துறைமுகத்தை கைப்பற்றியதிலிருந்து தொடங்கிய இத்தாலிய ஆதிக்கப் பரவல் இத்தாலி யின் வணிக நிறுவனத்தினது கட்டுப்பாட்டில் வளர்த்தெடுக்கப்பட்டு 1882 ஆம் ஆண்டு நேரடியாக இத்தாலியின் அரசுக்கட்டுப்பாட்டில் கொணரப்பட்டு நேரடியாக ஆளப்படத்துவங்கியது. அதன்பின் 1940 வரை இத்தாலியின் குடியேற்ற நாடாக எரித்திரியா விளங்கியது. பல்வேறு மொழிகள், இனங்கள், வாழ்நிலப்பகுதிகள், கிருத்துவம் இஸ்லாம் உள்ளிட்ட மூன்று மதங்கள் எனக் கிடந்த எரித்திரியா தன் தேசிய ஒற்றுமையை உருவாக்கி வளர்த்துக்கொண்டது இந்தக்காலப் பகுதியில்தான்.

இத்தாலிக்கு அடிமை நாடாக இருந்த லிபியா, சோமாலியா போன்ற பகுதிகளும் தனித்த நவீன தேசங்களாக உருவம் பெற்று எழுந்து கொண்டிருந்தத்தும் இக்காலத்தில்தான். இரண்டாம் உலகப்போரில் படுதோல்வியுற்ற இத்தாலியிடமிருந்து விடுதலைபெற்ற லிபியாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமாலியாவும் நவீன தேசங்களாக உரிமை பெற்று எழுந்தன. ஆனால் எரித்திரிய மக்களின் தலையெழுத்து வேறுவகையாய் இருந்தது.

இத்தாலி வெளியேறியபின் பிரிட்டிஷ் ராணுவ நிர்வாகத்தின் கீழ் பிரிட்டிஷ் குடியேற்ற நாடாக 1941 முதல் 1951 வரை இருந்தது. பிரிட்டிஷ் குடியேற்ற காலத்தின் இறுதியில் எரித்திரிய மக்களின் விருப்பத்திற்கு மாறாக எரித்திரியா வலுக்கட்டாயமாக எத்தியோப்பியாவுடன் இணைக்கப்பட்டது. மூன்றில் இருபங்கு கன்னெய் வளம் கொண்ட அரேபிய வலையத்தினருகே எரித்திரியா இருந்தமையோடு அதன் மீது புவிசார் அரசியல் மற்றும் படையியல் முக்கியத்துவம் கொண்டு விளங்கிய வெள்ளை வல்லரசுகள் எரித்திய விடுதலையை மறுத்ததற்கான காரணமாக இருந்தன. உலக ஆதிக்க வல்லரசுகளின் ஊதுகுழலான தேசங்களின் ஒன்றியம் (ஐ.நா அவை) எரித்திரிய மக்களின் கருத்துக்களைப் புறந்தள்ளி 1952இல் இம்முடிவை எடுத்தது. எத்தியோப்பியாவுடன் கூட்டரசாக 10 ஆண்டுகள் எரித்திரியா இருக்குமென்றும், அதன்பின் எரித்திரிய மக்களிடம் அவர்களின் விடுதலை குறித்த கருத்துவாக்கெடுப்பு (Referendum) நடத்தப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் அவை தன் முடிவை அறிவித்தது. கூட்டரசின் பொருள் எரித்திரிய மக்களுக்கு விளக்கப்படவோ முக்கியமாக எத்தியோப்பியாவுக்கு அறிவுறுத்தி வழிகாட்டவோ தேசங்களின் ஒன்றியம் சொற்கள் ஏதையும் விட்டுச்செல்லவில்லை என்பதிலிருந்தே அதன் கூட்டாட்சி ஏற்பாடு யாருக்கானது என்பது தெளிவாக நமக்குப் புரிகின்றது.

1962-ல் ஐக்கிய நாடுகள் அவையும் அமெரிக்க வல்லரசும் அமைதியின் வேடமிட்டு வேடிக்கை பார்க்க எத்தியோப்பியா ஒருதலைச்சார்பாக கூட்டரசு முறையை ஒழித்துக்கட்டியது. எரித்திரியா எனும் உலகின் மிக வறிய அந்தத்தேசம் எத்தியோப்பியாவின் 14 ஆம் மாநிலமாக வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டது. ஆதிக்க வல்லரசுகளின் நலன்கள் எரித்திரியாவை விடுதலை பெற்ற தேசமாக மலர்வதை இரண்டாம் முறையாக தடுத்து நிறுத்தியது.

## இத்தாலியின் குடியேற்றம்

ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை உருவாக்கிக்கொண்டிருந்த ஐரோப்பிய அநாகரிக அரசுகளில் ஒன்றாக இத்தாலியும் அதே காலகட்டத்தில் குடியேற்ற நாடுகளை உருவாக்கிக் கொண்டிருந்தது. பொதுவான குடியேற்ற நாடாக ஒன்றை ஆக்கிக்கொள்வதில் வல்லரசுகளுக்கிடையே நோக்கங்களில் வேறுபாடேதும் கிடையாது என்றாலும் அந்நோக்கங்களை அடைய அவை மேற்கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைகளில் பெருத்த வேறுபாடுண்டு. அவ்வகையில் இத்தாலியின் ஆதிக்கம் வேறுபடும் வழிமுறைகள் கவனம் கொள்ளப்படவேண்டியவை. ஏனெனில் பிற்காலத்திய எரித்திரியாவை கடுமையாகப் பாதித்த காரணிகள் அவை. 1890 களிலிருந்து துவங்கிய இத்தாலிய ஆதிக்கப் பரவல் லிபியா, எரித்திரியா, சோமாலியா, எத்தியோப்பியா எனப்பரவிக்கொண்டிருந்த காலத்தில் இத்தாலியில் ஏற்பட்ட பாசிச ஆட்சி எரித்திரியா உள்ளிட்ட இத்தாலியின் குடியேற்றப்பகுதிகளிலும் கடும் பாதிப்பை ஏற்படுத்தின.

எல்லா வல்லரசுகள் போலவே இத்தாலியும் தம்மால் ஆளப்பட்ட எரித்திரியர் உள்ளிட்ட ஆப்பிரிக்க மக்களை தமக்கு இணையாகக் கருத இயலவில்லை. இருண்ட கண்டத்தில் நாகரிகத்தை அறிமுகம் செய்யவந்ததாக தம்பட்டம் அடித்துக்கொண்ட இத்தாலியர்கள் உருவாக்கிய இன அடுக்குவரிசையில் உச்சத்தில் இத்தாலியர் உள்ளிட்ட ஐரோப்பியர், இடைநிலையில் அராபியர் மற்றும் வட அமெரிக்கர், இறுதியாக கீழ்நிலையில் ஆப்பிரிக்கர் என அரசு மற்றும் சமூக நடவடிக்கைகளில் முன்னுரிமைகளும் சலுகைகளும் இனம்பார்த்து அளிக்கப்பட்டன. பாசிச இத்தாலி மற்ற 'சனநாயக' ஐரோப்பியர் களைவிட இனப்பாகுபாட்டில் வெறியோடு இயங்கினர்.

இந்த அடிப்படையில் இத்தாலியின் எரித்திரிய ஆக்கிரமிப்பை இரண்டாகப் பிரிக்கலாம். முதலாவதாக 1880இல் தொடங்குகிற இத்தாலிய ஆதிக்கப்பரவல் காலம் இரண்டாவதாக, மேற்குறிப்பிட்ட ஆதிக்கப்பரவல் சற்றேறத்தாழ முடிவடைந்து இனவேற்றுமைசார்ந்த பாசிச திட்டங்கள் தீவிரம்பெற்ற காலம்.

1922 ஆம்ஆண்டு முசோலினி இத்தாலியின் ஆட்சியைப் பிடித்தமை இத்தாலியைப்போலவே இத்தாலியக் குடியேற்றங்களையும் பாதித்தது.1941 இல் இத்தாலி உலக அரசியல் சூழலின் காரணமாக எரித்திரியாவிலிருந்து வெளியேறும்வரை பாசிச அரசியல் எரித்திரியாவை கடுமையாகப் பாதித்தது.

எரித்திரிய அதிபர் இசையஸ் அஃபெர்கி அவர்களின் சொற்களில் சொன்னால் எரித்திரிய தேச ஒர்மை வழங்கியமை தவிர இத்தாலி எரித்தியர்களுக்கு ஒரு நன்மையும் புரியவில்லை என்பதே உண்மை.

### 1. பொருளியல் தளத்தில்

எரித்திரியா தனக்குள் தேங்கிப்போன, உள்சுழற்சியில் தங்கி இயங்குகிற சிற்றூர் பொருளியல் அமைப்பு கொண்ட ஆழ்ந்த நிலக்கிழமை சமூக அமைப்பாக இருந்த காலகட்டத்தில் உள்நுழைந்த இத்தாலி அந்த தேசத்தையே பொருளியல்தளத்தில் ஒரு மறுவடிவமைப்புச செய்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லலாம். இத்தாலிய ஆட்சியாளர்கள் எரித்திரியாவின் வளம்மிக்க விவசாய நிலங்களை தொடர்ச்சியாக தம் நேரடிக் கட்டுப்பாட்டில் கொணர்ந்து தென் இத்தாலியிலிருந்து தம்மால் ஓட்டிவரப்பட்ட நிலமற்ற விவசாயக்கூலிகளுக்கு அவற்றை வழங்கினர்.

1920களின் பிற்பகுதியில் எரித்திரியாவின் பரப்பில் சரிபாதியை தமக்கு உரித்தானவையாக அவர்கள் சொந்தம் கொண்டாடினர். இதில் சாலைகள், கடற்கரைகள், துறைமுகங்கள், காடுகள், நதிகள், சுரங்கங்கள், ஆற்றுப்படுகைகள், உழவுநிலங்கள், மக்கள் பயன்பாட்டில் இல்லாத நிலங்கள் , கிழக்கு மற்றும் மேற்குத் தாழ்நிலங்கள் ஆகியவை அடங்கும். மேற்படிப்பட்டியலில் வரக்கூடியவை அரசரின் நிலங்களாக அறிவிக்கப்பட்டு இத்தாலிய ஆட்சியாளர்களின் சட்ட மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொணரப்பட்டன. இக்காலகட்டத்தில் தன் குடியேற்றப்பகுதியாக இத்தாலி எரித்திரியாவை உருவாக்கும்பொருட்டு இத்தாலியர் குடியேற்றம் தொடர்ந்தது. 1930 களில் 5000 அளவில் இருந்த இத்தாலியர் எண்ணிக்கை பத்து ஆண்டுகளில் அதாவது 1941 ஆம் ஆண்டளவில் அவ்வெண்ணிக்கை 70,000 த்தை தொட்டது. பேரளவு நிலங்களைக் கொண்ட எரித்திரிய கிருத்துவ சர்ச்சுகளிடமிருந்து நிலங்கள் 'அரசருக்கு' மாற்றித்தரப்பட்டன. நிலத்தை மட்டுமே வாழ்வாதாரப் பிடிமானமாகக் கொண்டிருந்த பெரும்பாலான எரித்திரியர்கள் வாழ்ந்துவந்த சூழ்நிலையில் மேற்படி நடவடிக்கை பெரும் அதிர்வை எரித்திரிய சமூகத்தில் ஏற்படுத்தியது. இதன்பின் நிகழ்ந்த மாற்றங்கள் எரித்திரிய பொருளியற்புலத்தில் மிக தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்தியவையாகும்.

வணிகம் சார்ந்த வேளாண்துறை அரும்பியது. எந்திரமயமாக்கப்பட்ட வேளாண்மை அறிமுகப்படுத்தப்பட்டது. எரித்திரியர்கள் ஆண்டில் சிலகாலம் உழைக்கப்பணிக்கபடுகிற வேளாண் கூலிகளாக மாறினர். பருத்தியும் புகையிலையுமாக பணப்பயிர்கள் விளைவிக்கப் பட்டன. உள்நாட்டில் வாழ்ந்த இத்தாலியர் தேவைக்கும் இத்தாலியப் பேரரசு விரிந்திருக்கும் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யவும் என எரித்திரிய வேளாண்மை மறுஉருவாக்கம் செய்யப்பட்டது. சமகாலத்தில் வேறெந்த ஆப்பிரிக்கப் பகுதியையும் விட எரித்திரியாவில் மேம்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன. அரும்பிக்கொண்டிருந்த சந்தைப்பொருளியல் அமைப்புக்கு உகந்த கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டன. எரித்திரியாவின் தேசிய உருவாக்கத்தில் இக்காலகட்டம் முக்கியமானதாகும். தனக்குள் முடங்கித் தேங்கிப்போன பொருளியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலிலிருந்து எரித்திரிய சிற்றூர்கள் வேறுவகையான பொருளியல் ஒழுங்கில் இணையத்துவங்கின. எரித்திரியாவின் தலைநகரான அஸ்மாரா-கெரன், கெரன்-அகோர்டாட் நகரங்கள் இருப்புப்பாதையால் இணைக்கப்பட்டன. எரித்திரியாவின் புகழ்மிக்க துறைமுகநகரான மசாவா தேசத்தின் உள்பகுதிகளோடு இருப்புப்பாதையால் இணைக்கப்பட்டன. இத்தாலிய ஆட்சியாளர்கள் இரு தலைமுறைகளாக உருவாக்கிய இம்மாற்றங்கள் எரித்திரிய தேச உருவாக்கத்தில் முதன்மையாக இடம்பிடிப்பவை என்றால் அது மிகையில்லை. எரித்திரிய தேச ஒற்றுமை மெல்ல மெல்ல முளைவிடத்தொடங்கியது.

தரம்மிக்க சாலைகள் எரித்திரிய மலைப்பகுதிகளையும் தாழ்நிலங்களையும் இணைத்தன.. இரு நவீன வானூர்தி நிலையங்கள் அமைக்கப்பட்டன.சிறு தொழிற்சாலைகள் அமைக்கபட்டன. பொத்தான்கள், சமையல் எண்ணெய், கட்டுமானப் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட இறைச்சி,புகைசுருட்டு,வீட்டுப்பயன்பாட்டுப் பொருட்கள் இத்தாலியர்கள் தொழிலகங்கள் மற்றும் பழப்பண்ணைகள் அமைக்கபட்டன.1939களில் ஏறத்தாழ 2,198 தொழிலகங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. கிழக்காப்பிரிக்க இத்தாலிப்பேரரசின் தொழிற்துறை நடுவமாக எரித்திரியா அந்தக்கால கட்டத்தில் கருதப்பட்டது. கட்டாய உழைப்பை உறிஞ்சி வளர்ந்த இந்த நிறுவனங்கள் எரித்திரிய பொருளியல் அமைப்பில் மாற்றங்களை நிகழ்த்தின. சந்தை நோக்கிய உருவாக்க முயற்சிகள் அன்றைக்கு இத்தாலியுனூடாக எரித்திரியர்கள் உலகைக் காண வழிவகை செய்தன.

மாறிக்கொண்டிருந்த எரித்திரிய பொருளியல் அமைப்பால் நகர மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்துவந்தது. 1940களில் 20 விழுக்காட்டுப்பேர் நகரத்தில் வாழ்ந்தனர். பல்வேறு வேற்றுமை களையும் பிரிவுகளையும் தாண்டி 'நாம் எரித்திரியர்' 'நம் தேசம் எரித்திரியா' எனும் தேசிய உணர்வும் உந்துதலும் வேறூன்றிக் கொண்டிருந்தன. அதன் மிக உயர்ந்த வடிவமாக எத்தியோப்பியா விலிருந்து தம்மை விலக்கி எரித்தியராக உணர்ந்து நிற்கும் நிலைக்கு வந்து சேர்ந்தனர். ஆம் எத்தியோப்பியாவைப்போல எரித்திரியா இப்போது நிலவுடைமைச் சுழலில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கும் தேசமல்ல. மாறாக ஒரு போர்க்குணம் மிக்க பாட்டாளிவகுப்பு வலுவான அடித்தளத்தை நிறவியாகிவிட்டது. உலகின் ஓசைகளைக்கேட்க எரித்திரியாவுக்கு காதுகள் முளைத்துவிட்டன. உலகின் அசைவுகளைக் காண எரித்திரியாவுக்கு கண்கள் பிறந்துவிட்டன. இத்தாலியினூடாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகைக் கூர்மையாக எரித்திரியர்கள் கவனிக்கத் தொடங்கினர். இத்தாலியின் கருணை வழியும் கண்களிலிருந்து புறப்பட்ட நல்லெண்ணங்களால் இம்மாற்றங்கள் நிகழ்ந்திருக்கவில்லை. இவை நன்மையில் சில தீமையுண்டு, தீமையில் சில நன்மையுண்டு எனும் இயற்கையின் விதிப்படி எரித்தியர்களுக்கு கிடைத்த ஒருசில பயன்களாகும்.

எரித்தியர்கள் உள்ளிட்ட ஆப்பிரிக்கர் யாவரும் ரோம் பேரரசிற்கு கிடைத்த மலிவான உழைக்கும் விலங்குகளாகவே நடத்தப்பட்டார்கள் என்பதே உண்மை.

## இத்தாலிய அநாகரிகர்களின் கொடைகள்

அடக்குமுறைக்கும் ஆதிக்கத்திற்கும் ஒரே நோக்கம் தூய நோக்கம் சுரண்டல் மட்டுமே. ஆனால் அநாகரிக வளர்ச்சியைப்பொறுத்து துணைநோக்கங்கள் கூடலாம், குறையலாம். இத்தாலிய பாசிச மனநோயாளிகளின் அரசியற்களமாகிப்போன நாட்களில் எரித்திரியா எனும் அந்த எளிய தேசம் பெற்றுக்கொண்ட மானுடவிழுமியங்கள் ஒன்றா இரண்டா...

பிரஞ்சு பிரிட்டிஷ் ஆதிக்கவாதிகளிடமிருந்து வேறுபட்டு நின்ற இத்தாலியர் எரித்திரியர்களுக்கு பெயரளவு பேச்சுரிமையையும் மறுத்தனர். அரசியல் கட்சிகளாக, சமூக அமைப்புகளாக மக்கள் திரளும் உரிமையை மறுத்துள்ளனர். இடைநிலைக்கு மேல் கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை. இத்தாலி கொண்டுவந்த பாசிச நாகரிகம் கருப்பு எரித்திரியர்களை நடமாடும் உழைக்கும் விலங்குகளாக ஐரோப்பிய அறிவியல் சமூகம் விளங்கிக் கொண்டது. 1930-40களில் எரித்திரியாவில் இருந்த இத்தாலியர் இதனை எவ்வளவு ஆழமாக நம்பினர் என்பதை உணரும் போதுதான் வெள்ளைச்சமூகம் எவ்வளவு அறிவற்ற அநாகரிகமான சமூகமாக விளங்கியது என்பது நமக்குப் புரியவரும்.சுரண்டல் நோக்கத்தோடு தம் மண்ணிலிருந்து இதுபோன்ற பிற்போக்கச்சேற்றையும் கைநிறைய அள்ளிவந்த இத்தாலியர் எரித்திரியா லிபியா, சோமாலியா எனத் தம்மால் முடிந்தமட்டிலும் வீசிச்சென்றனர்.

கல்வி அறிவு மறுக்கப்பட்ட, உழைப்பதன்றி வேறெதுவும் அறியாத அடிமைக் கருப்பர்களையும் பட்டியிலடைத்துவைத்த இத்தாலியை எந்த எரித்திரிய கருப்பு மனச்சான்று நாகரிகத்தின் வரவாகக்கொண்டாட இயலும்?

## எரித்திரியப்பெண்கள்

உலகின் கருவியேந்திய போராட்ட இயக்கங்களில் புதுமுன்மாதிரியை எரித்திரிய தேசிய விடுதலை இயக்கம் உருவாக்கிக்காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரித்திரிய விடுதலைக்கென களம்கண்ட போராளிகளில் மூவரில் ஒருவர் பெண், சற்றொப்ப 30 விழுக்காட்டினர் பெண்கள். இந்த மாபெரும் வரலாற்றை உருவாக்கும் மனவலிமை எரித்திரிய பெண்களின் இத்தாலிய அடக்குமுறையிலிருந்து உருக்கொண்டிருந்தது. எரித்திரிய நிலவுடைமைப் பண்பாட்டின் அழுத்தத்தில் திணறிக் கொண்டிருந்த நிலையில், பஞ்சமும் பட்டினியும் வாழ்வின் பகுதியாக மாறிவிட்டிருந்த நிலையில், இத்தாலிய ஆதிக்க ஆட்சி அக்கொடுமைகளை முழுமை செய்தது. சிறு உழவர்கள் வேலையற்ற நகர்ப்புற உதிரிகளாகவும் தங்கச்சுரங்கக் கூலிகளாகவும் போயினர். தந்தையின் நிழலில், மகனின் நிழலில் நிற்பதன்றி வேறெதுவுமறியாத எரித்திரியப் பெண்கள் வீடுகளை விட்டு வெளியே வந்தனர். அவர்கள் வந்து பணியாற்ற நாகரிக ஐரோப்பிய ஒழுங்கில் இத்தாலிய ஆட்சி மாபெரும் தொழிலகங்களை உருவாக்கியிருக்கவில்லை. பெண்கள் எப்போதும் பெண்களே. வரலாற்றின் நிரந்தர நியதிப்படி அவர்கள் பாலியல் தொழிலாளிகளாக்கப் பட்டனர். ஐரோப்பாவின் தொடர்ந்த நாகரிகங்கள் அனைத்தையும் போலவே இத்தாலியும் இருகை நீட்டி அவர்களை அழைத்தது. மேலும் இத்தாலியக் குடும்பங்களில் வேலைக்காரப்பெண்களாக நம் எரித்திரிய சிறுமிகள் போய்ச்சேர்ந்தனர். அதிகாலையிலிருந்து முன்னிரவு வரை தீராத உழைப்பும் இத்தாலியரின் பாலியல் அத்துமீறல்கள் தந்த வெறுப்பும் மெல்ல மெல்ல எரித்திரியப்பெண்களின் ஆழ்மனதில் ஓர் எரிமலைக்குழம்பை தேக்கிக் கொண்டிருந்தன. நிலவுடைமைப் பண்பாட்டுச் சுமையை தாங்காமாட்டாமல் சுமந்து கொண்டிருந்த எரித்திரியச் சமூகத்தவர்களின் பண்பாட்டு முகத்தில் இக்காயங்கள் வடுக்களானபின்னும் வலித்துக்கொண்டிருப்பதன் காரணம், அக்காரணத்தின் உக்கிரம் இவையெல்லாம் இணைந்து உலகின் ஈவிரக்கமற்ற பெண் போராளிகளை உலகிற்கு அளித்தது.

பாசிச இத்தாலியின் பட்டியலில் இன்னொரு சாதனையுண்டு. எரித்திரியப் பெண்கள் வாய்ப்புகிடைக்கையில் கருவருக்கப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான பெண்களின் கருப்பை அகற்றப்பட்டது. மாத விலக்கு நிகழாததை தீராத மனப்பிறழ்வாக உள்வாங்கிக்கொண்ட எரித்திரியப்பெண்கள் ஆயிரக்கணக்கில். அந்த நிகழ்வுக்குப்பின் தற்கொலை புரிந்துகொண்டவர்கள் நூற்றுக்கணக்கில்.

இத்தாலிய மருத்துவர்கள் தம்மிடம் ஏதேனும் நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்கு வரும் எரித்திரியப்பெண்களுக்கு இந்த அறுவை சிகிச்சை புரிவதை தம் தேசம் தமக்கிட்ட கட்டளையாகக் கருதிச்செய்தனர்.1940 களிலும் இத்தாலியின் இறுதிநாட்கள் வரை இந்த இத்தாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர்கள் எரித்திரியப்பெண்களைத் தொடர்ந்து கருவறுத்தனர். பாசிசச் சீழ்பிடித்த இத்தாலிய மனநோயாளிகள் நிகழ்த்திய இந்த கொடூரங்கள் 'எரித்திரிய ஒர்மையை' 'எரித்திரியா எம் தேசம்' என்ற வேட்கையை அணையாப் பெருந்தீயாக ஊதிவளர்த்தது.

## ஆதிக்கத்தின் வடிவ மாற்றம்

1941 ஆம் ஆண்டு இத்தாலி இரண்டாம் உலகப்போரில் தோற்கடிக்கப்பட்டபிறகு, வெற்றியாளர்களான இங்கிலாந்து, பிரான்சு, சோவியத் ஒன்றியம், அமெரிக்கா ஆகியவை கலந்தாலோசித்து இங்கிலாந்தே தொடர்ந்து எரித்திரியாவை புதிய காலனியாக ஆண்டுவருவது என முடிவுசெய்தன. அதன்படி இங்கிலாந்து படை நிர்வாகம் 'ஆக்கிரமிக்கப்பட்ட எதிரியின் நிலப்பகுதியாக' ஆளத்தொடங்கியது. இவ்வாட்சி 1952 வரை நீடித்தது.

எரித்திரியர்கள் 60 ஆண்டுகள் ஈவிரக்கமற்ற கட்டாய உழைப்பால் உருவாக்கியிருந்த தொழிலகங்கள் ஆங்கிலேயரின் கண்களை உறுத்தத்தொடங்கின. எப்படியும் நாளை இந்த மண்ணில் தம் ஆதிக்கம் நீடிக்காது என்பதை அறிந்திருந்த அவர்கள் வளர்ந்த தொழிலகங்கள் பெருகியிருக்கிற எரித்திரிய தேசத்தை அப்படியே விட்டுச்செல்ல விரும்பவில்லை. எண்ணற்ற எரித்தியர்கள் உழைத்துக்கொண்டிருந்த தொழிற்சாலைகள், பழப்பண்ணைகள் யாவும் இழப்பீடு ஏதுமின்றி இழுத்துமூடப்பட்டன. எரித்தியர்கள் வேலையிழந்து வீதிக்கு ஆயிரக்கணக்கில் வந்தனர். மூடப்பட்ட தொழிலகங்களின் சொத்துக்களை விற்றுக்கொள்ளையிட்ட ஆங்கிலேயரின் செய்கைக்கு தொழில்மயமான தேசம் ஆப்பிரிக்காவில் இருக்கக்கூடாது என்ற நல்லெண்ணம் தவிர வேறெந்தக் காரணமும் இல்லை.

இத்தாலிக்கு எரித்திரியா மீதான உரிமையை ஒருபுறத்தில் அங்கீகரித்துக்கொண்டும் மறுபுறத்தில் எரித்திரியாவை விடுவிக்க எண்ணம் காட்டியும் இங்கிலாந்து படை நிர்வாகம் நடந்துகொண்டது. எரித்திரிய நிர்வாகப்பணியிலிருந்த இத்தாலியர்கள் மெல்ல மெல்ல ஆங்கிலேயர்களால் மாற்றீடு செய்யப்பட்டனர். ஒரு தேசத்தைக் குடியேற்றம் செய்து குதிரையேறுவதில் வரலாற்றுப் பேரறிவு நிரம்பப் பெற்ற ஆங்கிலேயர் எழுந்துகொண்டிருந்த எரித்திரிய தேசிய உணர்வை, உந்துதலை நன்கு உணர்ந்தனர். ஒரு நீண்ட விடுதலைப் போராட்டத்தை தீர்க்கமாக முன்னூகித்தனர். அதனைத் தொடர்ந்து தம் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தினர். இத்தாலிய அரசின் உரிமையாய் ஆக்கப்பட்டுக் கிடந்த எரித்திரிய தேசத்து வளங்களை வேண்டுமென்றே தம் ஆளுகைக்கு ஆங்கிலேயர் கொணர்வதைத்தவிர்த்தனர். ஆகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்போலவே எரித்திய தேசத்தின் வளங்கள் அயலவர்களான இத்தாலியர்களால் தொடர்ந்து சுரண்டப்பட்டுக் கொண்டிருந்தன. இதனால் சிற்றூர்ப்புற கலகங்கள் பெருமளவு நடக்கத்தொடங்கின. நிலமிழந்த எரித்திரிய உழவர்களுக்கும் இத்தாலிய உழவர்களுக்கும் இக்கலகங்கள் நிகழ்ந்தன. இத்தாலிக்கால ஆட்சியின் இறுதிக் காலத்தில் வெடித்துக்கிளம்பிய இக்கலகங்கள் ஆங்கிலேயர் ஆட்சியிலும் தொடர்ந்தன. எரித்திரிய மக்கள் ஆங்கிலேயர் ஆட்சி தற்காலிக மானதென்று உணர்ந்திருந்தவேளையில் அவர்களை அச்சுறுத்தி அத்துமீறிக்கொண்டிருந்த எத்தியோப்பிய ஆதிக்கப் பரவலும் அவர்களுக்கு புரிந்தது.

ஆங்கிலேயர் இத்தாலியரிடமிருந்து வேறுபட்டு கல்வி உரிமை, பேச்சுரிமை ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து இக்காலகட்டத்தில் தேச நேயக் கட்சி எனும் குடியேற்ற ஆதிக்க இயக்கம் தோன்றி வளரத் தலைப்பட்டது. அதன்பின் பல்வேறு கட்சிகள் இயக்கங்கள் தோன்றலாயின. எரித்திரிய தாராளவாத முற்போக்கு கட்சி, முஸ்லீம் லீக்,விடுதலைக் கழகம், ஒன்றியக் கட்சி ஆகிய கட்சிகள் தோன்றிவளர்ந்தன. அவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அரசியற்போக்கு கொண்ட கட்சியாகும். எடுத்துக்காட்டாக ஒன்றியக்கட்சி நேரடியாக எத்தியோப்பியாவோடு எரித்திரியா இணைய வேண்டும் என்ற அரசியல் கொண்டு நேரடியாக எத்தியோப்பிய அரசால் ஆதரிக்கப்பட்ட கட்சியாகும்.

வெளிப்படையாக பேச்சுரிமை கருத்துரிமை அளிக்கப்பட்ட இக்காலகட்டத்தில் அமெரிக்கா எரித்திரியாவில் மூன்று படையியல் தளங்களை அமைத்தது. அதன் நல்லாசியோடு எத்தியோப்பிய அரசு எரித்திரிய விடுதலை கோரும் அமைப்புகள் தலைவர்கள் ஆகியோரை சட்டத்திற்கு புறம்பான முறையில் கொன்றும் அரட்டியும் வந்தது.ஒவ்வொருநாளும் எரித்திரியாவில் காலூன்றிக்கொண்டிருந்த அமெரிக்க நலன்கள் எரித்திரியா விடுதலை பெறுவதை முக்கியத்துவம்மிக்க செங்கடல் பகுதியின் 'அமைதிக்கு' ஊறு விளைவிக்கக் கூடியதாகக் கருதியது.

இறுதியாகப் பல்வேறு உரையாடல்கள் கடந்தபிறகு ஐக்கிய நாடுகள் அவை அமெரிக்க நலன்களின் ஊதுகுழலாகி 1952 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம்நாள் தன் முடிவை ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதன் வழி அறிவித்தது. எத்தியோப்பியாவுடன் கூட்டரசாக எரித்திரியா இணைக்கப்படுகிறது என்பதே அம்முடிவு. இம்முடிவை எட்டும்முன் ஐக்கிய நாடுகள் அவை அனுப்பிய விசாரணைக்குழுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றிருந்த சோவியத் ஒன்றியம் எத்தியோப்பியாவுடன் இணைக்கப்பட இறுதிவரை எதிர்ப்புதெரிவித்தது இங்கே குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் கையாளாக அன்றிருந்த எத்தியோப்பிய ஆளும்வகுப்பும் அமெரிக்காவும் கூட்டுச்சதி மூலம் நிறைவேற்றி மேற்படி தீர்மானம் அக்காலத்திற்குப்பின் 40 ஆண்டுகாலம் குருதிவெள்ளம் பெருக்கெடுத்தோடிடக் காரணமாக அமைந்தனர்.

ஐக்கிய நாடுகள் அவையின் தீர்மானத்தின்படி ஆங்கிலேயர் வெளியேற எத்தியோப்பியா 1952 செப்டம்பர் 15ஆம் நாள் எரித்திரியாவை கூட்டரசாக அதிகாரப்பூர்வமாக இணைத்துக் கொண்டது.

## கூட்டாட்சிக் காலம்

1952 ஆம் தொடங்கிய எரித்திரிய - எத்தியோப்பியக் கூட்டாட்சி இத்தாலிய-ஆங்கிலேய ஆதிக்கத்திற்குப் பிந்தைய எரித்திரியாவை மேலும் துயரக் கடலில் ஆழ்த்தியது. கூட்டரசு, கூட்டாட்சி என்ற சொற்களின் பொருள் எரித்தியர்களுக்கோ எத்தியோப்பியர்களுக்கோ விளக்கப்படவும் இல்லை அதற்கான முயற்சி உலக ஆதிக்க வலைப்பின்னலின் மன்னாதி மன்னர்களால் எடுக்கப்படாததோடு எத்தியோப்பியா, கூட்டாட்சி காலமான 1952-62 வரை நிகழ்த்திய அரசபயங்கரவாதத்தை மௌன சாட்சியாக அனைத்துலக சமூகம் வேடிக்கை பார்த்தது. எரித்திரியா தன் தேசிய விடுதலைப் போரை முழுக்க முழுக்க அமைதிவழியில் நிகழ்த்திய காலகட்டமாக இது அமைந்தது. மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் இயக்கங்களின் தொடர்ச்சியான போராட்டங்கள் இக்காலகட்டத்தின் சிறப்பாகும். ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் எரித்திரிய மக்கள் தலைவர்களை கொல்வதில் இலைமறைகாயாக ஈடுபட்டு வந்த எத்தியோப்பிய அரச பயங்கரவாதம் இப்பொழுது வெளிப்படையாக இயங்கத் தொடங்கியது.

1956 ஆம் ஆண்டு எரித்திரியாவின் ஆட்சிமொழிகளான டிக்ரிக்னா, அரபி இரண்டும் நீக்கப்பட்டு எத்தியோப்பிய மொழியான அம்ஹாரா ஆட்சிமொழியாக்கப்பட்டது பாசிச இத்தாலி, ஆதிக்க ஆங்கிலேயர் செய்யத்துணியாத செயல் ஒன்றை எத்தியோப்பிய அரச பயங்கரவாதிகள் செய்தனர். 54,000 டிக்ரிக்னிய மொழிப்புத்தகங்கள் எரிக்கப்பட்டன. புத்தகங்கள் எரிப்பின்மூலம் எரித்திரிய தேசத்தின் வரலாற்றுச் சுவடுகளை இல்லாதொழிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும் இது.

எரித்திரியா தனக்கென சொந்தமான அரசமைப்புச்சட்டத்தையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற சட்டப்பேரவையையும் கொண்டிருந்த இக்காலகட்டத்தில் எத்தியோப்பிய அரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதத்திடம் அனைத்து உரிமைகளையும் நேரடியாகப் பறிகொடுத்தது.

எத்தியோப்பியா தனது அடக்குமுறைகளை திட்டமிட்ட படிநிலைக் கட்டங்களாகப் பகுத்துச் செயல்பட்டது. கூட்டாட்சிக் காலத்தின் முதல் ஆண்டு முதல் இறுதியாண்டுவரை பல்வேறு கட்டங்களாக நிகழ்ந்த அடக்குமுறைகளில் முகாமையானவையாக எரித்திரிய அரசின் நிர்வாக அதிகாரங்கள் குறைக்கப்படல், எரித்திரிய மக்கள் தம் அரசமைப்புச்சட்டம் வழிப்பெற்ற பேச்சுரிமை எழுத்துரிமை கருத்துவெளிப்பாட்டுரிமை ஆகியவற்றை இல்லாதொழிக்கும் வகையில் செய்தித்தாள்களை தடைசெய்தல், தொழிற்சங்கங்களைத் தடைசெய்தல், எரித்திரிய மொழிகளை ஆட்சிமொழித் தகுநிலையிலிருந்து நீக்குதல், எரித்திரிய நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகளை அப்பட்டமாக மீறுதல், எரித்திரிய சுங்க வருமானத் தொகையை எத்தியோப்பியாவுக்கு மாற்றுதல், எரித்திரிய தலைநகரிலிருந்து அனைத்து தொழிலகங்களையும் எத்தியோப்பிய தலைநகரான அடீஸ் அபாபாவுக்கு மாற்றுதல், எரித்திரிய மக்கள் தலைவர்களை அரசியல் நபர்களை நாடு கடத்துதல் ஆகியவை திட்டமிட்ட நகர்வுகளாக நிகழ்த்தப்பட்டு இறுதியாக கடும் படையியல் அடக்குமுறை தொடங்கியது. இந்த அடக்குமுறையின் நிழலில் எரித்திரிய மக்களுக்கு மேலும் ஓர் அநீதி இழைக்கப்பட்டது.

1962 ஆம் ஆண்டு எத்தியோப்பியப் பேரரசர் ஹெய்ல் சேலசி எரித்திரியாவின் கூட்டாட்சிமுறை முடிவடைந்தது என அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். வலுக்கட்டாயப்படுத்தியும் மிரட்டியும் எரித்திரிய சட்டமன்றம் பணியவைக்கப்பட்டதைத் தொடர்ந்து எத்தியோப்பியப் பேரரசர் இச்சாதனையைப் புரிந்தார். எரித்திரிய மக்களுக்கு முன் வேறெந்தத் தெரிவும் இல்லாத நிலையில் எரித்திரிய மக்களின் சனநாயக மக்கள்திரள் நடவடிக்கைகளுக்கான அனைத்துக் கதவுகளையும் அடைத்துவிட்ட எத்தியோப்பிய அரசை எதிர்கொள்ள கருவிப் போராட்ட எழுச்சி தொடங்கியதோடு எரித்திரிய எத்தியோப்பிய கூட்டாட்சிக் காலம் முடிந்தது.

## எரித்திரிய விடுதலை இயக்கம் தோன்றியது

செங்கடலையொட்டிய அரசியல்-வணிக-படையியல் ஆதிக்கத்தில் அமைந்திருந்தகாரணத்தால் துருக்கியர், எகிப்தியர், இத்தாலியர், ஆங்கிலேயர், இறுதியாக எத்தியோப்பியா என வரிசையாக ஆதிக்க நுகத்தடியில் சிக்கிக்கிடந்த எரித்திரிய தேசம் பத்தாண்டு கூட்டாட்சி ஏற்பாடு எத்தியோப்பியாவால் முடிவுக்கு கொணரப்பட்டதற்கு சரியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆண்டுக்கு முன் தன் விடுதலை இயக்கத்தை உருவாக்கியது. எத்தியோப்பியாவின் அடக்குமுறைகளின் நிழலில் சிறுசிறு கமுக்கக் குழுக்களாக இயங்கிவந்த எரித்திரிய விடுதலைக் கருவிக் குழுக்களின் செயற்பாடுகளும் எரித்திரிய விடுதலையில் முன்நின்ற இளைஞர்களுக்கு ஒரு புதிய தெரிவாக இருந்தன.

அதுவரைகால சனநாயகப் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவந்த எத்தியோப்பியா இதற்கு நேரடிக் காரணமாக நின்றது. பொதுவாக ஆப்பிரிக்க வரலாற்றிலேயே நீண்டதொரு கருவிப்போர் துவங்கியது.

## எரித்திரிய விடுதலை முன்னணி எழுந்தது

1950களின் இறுதியில் எரித்திரிய அறிஞர்கள் போர்க்குணம் மிக்க மாணவர்கள், தலைமறைவு விடுதலைக்குழுக்கள், புலம்பெயர் எரித்தியர்கள் என தேசத்தின் அரசியல் மேற்படலத்தில் திரண்டிருந்தவர் நடுவே எரித்திரிய விடுதலை இயக்கமொன்றைத் தொடங்கவேண்டிய கட்டாயம் தொடர்ந்து மிகுந்து வந்தது. எத்தியோப்பியாவின் படையின் வெடிக்குழல் முன் அனைத்து சனநாயக நம்பிக்கைகளும் அற்றுப்போன நிலையில் கருவிப்போரை முன்மொழிய எரித்திரிய மக்கள் பட்டாளம் அணியமாய் இருந்தது.

1958 இல் எரித்திரிய விடுதலை இயக்கம் தொடங்கப்பட்டது. 1961 இல் எரித்திரிய விடுதலை முன்னணி தோன்றி அதே ஆண்டு செப்டம்பர் 1 ஆம் நாள் அதன் வரலாற்றுச் சிறப்பு மிக்க கருவிப்போர் அறிவிப்பைச் செய்தது. தமிழகத் தமிழ்த் தேசியத் தலைவர் தமிழரசன் ஆதிக்க இந்தியாவில் குண்டர்களால் கொல்லப்பட்ட அதே செப்டம்பர் 1. நீதியிலும் விடுதலையிலும் வற்றாத நம்பிக்கை கொண்டிருந்த எரித்திரிய மக்களின் குரல் கருவிப் போராட்டத்தின் மொழியைத் தேர்ந்தெடுத்துப் பேசத்தொடங்கிய அன்று உலகம் இன்றைப்போல் இல்லை. குடியேற்றம் புரியப்பட்டு வெள்ளை அநாகரிகர்களின் கொள்ளைக் காடாக மாற்றப்பட்டிருந்த உலகின் பல்வேறு தேசங்கள் உக்கிரமாக விழித்தெழுந்த காலகட்டமது.

இரு உலகப்போர்களால் உலகின் அரசியல் தீவிர மாற்றம் கண்டு பழைய ஐரோப்பிய வல்லரசுகள் சில ஆதிக்கம் இழந்தன. அமெரிக்கா எனும் வல்லாதிக்கப் பெரும்பூதம் எழுந்து நிற்க, ஒடுக்கப்பட்ட மக்களின் பேருருக்கொண்ட நம்பிக்கையாய் சோவியத் ஒன்றியம் சுடர்விட என உலகம் மாறுபட்டு தோற்றம் கண்டிருந்தது. தேசிய விடுதலை அரசியலில் கருவி ஏந்துவது ஒரு இயக்கம் இதழ் வெளியிடுவதைப்போல சாதாரணமாக நோக்கப்பட்ட காலமது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெய்ரோவில் அரபு நாடுகளின் பின்னணியில் எரித்திரிய சமூகத்தின் இசுலாமிய மக்கட்பிரிவின் முதன்மையான பங்கேற்போடு எரித்திரிய விடுதலை முன்னணி தொடங்கப்பட்டது.

## எரியும் தேசமும் உருக்கொள்ளும் இயக்கமும்

பழைய இத்தாலியத் துவக்குகளைக் கொண்ட எரித்திரிய கரந்தடிப் போராளிகளின் சிறிய குழுவொன்று எரித்திரிய விடுதலைப் போரின் முதல் தாக்குதலை 1961 செப்டம்பர் 1ஆம் நாள் தொடங்கியது. அத்தாக்குதல் மேற்கு எரித்திரிய நகரான அடல் எனும் பகுதியில் எத்தியோப்பிய காவலர்கள் மீது தொடுக்கப்பட்டது.

அதன்பின் தொடர்ந்து சிற்றூர்ப்புற கெரில்லாத் தாக்குதல்கள் நடைபெற்றன. தொடக்கத்தில் போதிய பயிற்சியின்மை, ஒருங்கிணைப்பில்லாத் தலைமைகள், அவற்றுக்கிடையேயான பகுதிவாரிப் பிளவுகள், அதனால் விடுதலை இயக்கத்திற்கு ஏற்பட்ட உயிர்விரயம் எனப் பல்வேறு சிக்கல்கள் விடுதலை முன்னணியை நெருக்கினாலும் அது தொடர்ந்து படையியலிலும் மக்கள் செல்வாக்கிலும் வளர்ந்துவந்தது. அதன் தொடர்ச்சியாக தொழிலாளர்கள், மாணவர்கள் அணிஅணியாக விடுதலை முன்னணியில் சேரத் தலைப்பட்டனர். 60களின் பிற்பகுதியில் சிற்றூர்ப்புற ஏழை உழவர்கள் பெருவாரியாக ஆதரவு நல்கத் தொடங்கினர். தொடக்கத்தில் இருந்த நிலைமாறி எரித்திரியாவின் மிகவும் அடித்தட்டு மக்களை விடுதலை முன்னணி ஈர்க்கத் துவங்கியபின் அமைப்புக்குள் முரண்கள் கூர்மைப்படத்தொடங்கின.

1965 ஆம் ஆண்டையொட்டிய நாட்களில் பேரளவு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து கார்டௌம் எனும் இடத்தில் அமைப்பின் மாநாடு நடைபெற்றது அல்ஜீரிய பாணியிலான கெரில்லா போர்முறை ஏற்கப்பட்டு எரித்திரியா நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது.1962 ஆம் ஆண்டு எட்டாண்டுக்கால விடுதலைப்போரின் பின் விடுதலை பெற்ற அல்ஜீரியா ஒரு மாபெரும் முன்னுதாரணமாகத் உணர்ந்தமையே இதற்குக் காரணம்.

பண்பாட்டிலும் மொழியிலும் மதத்திலும் தன்னை அரபுலகத்தோடு அடையாளம் கண்டுகொண்ட விடுதலை முன்னணியின் தலைமை பன்முகப்பட்ட எரித்திரியாவின் தேசிய இயக்கமாக வளராது போவதற்கான காரணங்கள் உள்ளும் புறமும் மிகுந்துகொண்டே வந்தன.

சிற்றூர்-நகரம், உழவர்-தொழிலாளர், ஒன்பது தேசிய இனத்தவர், பல்வேறு மொழியினர், கிருத்துவர்-இசுலாமியர் என எரித்திரிய சமூகத்திற்குள் இருந்த வேறுபாடுகளையெல்லாம் பிளவுகளாக்கிவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு எரித்திரிய விடுதலை முன்னணி முதிர்ச்சியற்ற அரசியலை வைத்திருந்தமை அவ்வியக்கத்தின் முதிர்ந்த தலைவர்களுக்கு அறிவர்களுக்கு செவிட்டில் அறைந்த உண்மையாய் உரைக்கத் தொடங்கியது.

எரித்திரிய விடுதலை என்ற ஒற்றைக் கருதுகோளில் துவங்கப் பட்டதே எரித்திரிய விடுதலை முன்னணி என்ற அரசியல் சிக்கல் மெல்லத் தலைதூக்கத் துவங்கியது. விடுதலை முன்னணியில் முற்போக்காளர்கள் பலர் இடம்பெற்றிருந்த போதிலும் அதன் அரசியல்திட்டத்தில் எரித்திரிய விடுதலை தவிர வேறு எரித்திரிய சமூக மாற்றத்திற்கான செயற் திட்டங்கள் ஏதுமில்லை. தேசியவாத இயக்கமாக மட்டுமே அரசியல் நடத்துவது அதன் நடைமுறையாக இருந்தது. கருவிப்போராட்டத்தின் மூலம் தேசங்களின் ஒன்றியம் எரித்திரியா மீது கவனம் செலுத்த நேரிடும் என்றும் அதன்மூலம் எத்தியோப்பியாவிலிருந்து சட்டவழிப்பட்ட உலக நாடுகளின் ஏற்பிசைவோடு கூடிய விடுதலையை பெற்றுவிடலாம் என்றவாறு அது திட்டம் வைத்திருந்தது. மேற்கண்ட நோக்கங்களினால் தன் அமைப்புக்குள் வந்த பெருவாரியான எரித்திரிய இளைஞர்கள், பெண்கள் போன்றவர்களுக்கு துவக்குப்(துப்பாக்கி) பயிற்சியளிப்பதோடு தன் எல்லையைச் சுருக்கிக்கொண்டது அது. கடும் நிலவுடைமை சமூக அழுத்தத்திலிருந்து வந்த அடித்தட்டு எரித்தியர்கள் இயக்கமும் நிலவுடைமைச் சமூகத்தின் வடிவமாக இருந்ததை என்சொல்ல?

முன் குறிப்பிட்டதுபோல உலகெங்கும் எரியும் புரட்சிகரப் போராட்ட நெருப்பு வளையத்துள் எரித்திரியா எரியாத கற்பூரமாய் எப்படி இருக்க முடியும்? ஒன்பது தேசிய இனங்களையும் சம மாக நடத்தாத போக்கு, பெண்ணடிமைத்தனம், வெறும் படையியல் கண்ணோட்டம் தாண்டி அரசியல் பயிற்றுவிக்கப்படாத அமைப்பின் மூடுண்ட தன்மை, வெகுமக்களின் பங்கேற்பில்லாத தன்மை குறித்த திறனாய்வு என எரித்திரிய விடுதலை முன்னணியில் சிக்கல்கள் தீவிரப்படத்தொடங்கின. அனைத்திற்கும் மேலாக எரித்திரியாவின் தற்சார்புக்கு உலைவைக்கும் அமைப்பின் அரபு நலன்களின் வெளிநாட்டு கட்டுப்பாட்டு மையங்கள் குறித்த விழிப்புணர்வு என எரித்திரிய விடுதலை இயக்கம் உள்ளே கொதிக்கத்தொடங்கியது. புரட்சியைத் தொடங்கிவைத்த இயக்கம் புரட்சிக்கு எதிராக மாறிப்போகும் சூழல் நெருங்கிக்கொண்டிருப்பதை அமைப்பின் உள்ளே இருந்த முற்போக்காளர்கள் உணரத்தொடங்கினர்.

வரலாற்றைத்தொடர்ந்து முன்தள்ளிச்செல்ல ஒரு பெரும்பிளவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கம் சந்தித்தாகவேண்டிய தேவை எழுந்தது. உலகின் பலதேசங்களில் இ து இயல்புதான். இப்பிளவுகள் வளர்ச்சி நோக்கிய பிளவுகள். இவை இல்லையேல் வரலாறு சில நேரங்களில் ஒரு நச்சுச் சுழலில் சிக்கிப்போகலாம். தமிழ்த்தேசியம் எனும் அரசியல் கருத்து உருவாகாத காலத்தில் ஈழம் தந்த கேள்விகளோடு தமிழகத்தைப் பொருத்திப் பார்த்த தலைவர் தமிழரசன் அடிமைத் தமிழ்ச்சமூகம் தன் புரட்சி இயக்கத்தை இந்திய வடிவத்தில், இந்தியத் தன்மையில் எப்படி கொண்டிருக்க இயலும் என வினா எழுப்பினார். இந்தியப் பொதுவுடமை இயக்கத்திலிருந்து ஒரு வரலாற்று முறிவை ஏற்படுத்தி தமிழகத்திற்கான 'தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி'யை தொடங்கியதைப்போலவே எரித்திரியாவின் விடுதலை இயக்கம் ஒரு பிளவுக்காகத் தவமிருந்தது.

## முட்டை உடைந்தது உயிர் பிறந்தது

1970 இல் உள்முரண்கள் கூர்மையடைந்து எரித்திரிய விடுதலை முன்னணி உடைந்து எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி பிறந்தது. இதன் இருபெரும் நோக்கங்கள் தேசவிடுதலை மற்றும் சமூக மாற்றம். அமைப்பின் ஒவ்வொரு படிநிலையிலும் தேசிய இனங்கள், ம தப்பிரிவுகள் வழி படிநிகராளுமை(பிரதிநிதித்துவம்) உறுதிசெய்யப் பட்டது. இயக்கத்திற்குள் நுழையும் ஒவ்வொரு எரித்திரியருக்கும் விரிவான அரசியல் பயிற்சி அளிக்கப்பட்டது. இடதுசாரி அமைப்புக்கேயுரித்த தோழமைப் பண்புகளுக்கு செறிவான முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. விடுதலை இயக்கம் எரித்திரிய தேச ஒற்றுமையின் வெளிப்பாடு என எரித்தியர்களுக்கும் உலகிற்கும் திரும்பத்திரும்ப எடுத்துச்சொல்லப்பட்டது. அடிப்படையில் படைகளைக் கொண்டுள்ள அரசியல் இயக்கமாக எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி வெளிப்படுத்திக்கொண்டது. முந்தைய இயக்கத்தைப்போல 'போரை வெல்வது' ஒன்றே தன் நோக்கமல்ல என அறிவிப்பு செய்தது. தன்னால் கைப்பற்றப்பட்ட விடுதலைப் பகுதிளில் சமூகப்பொருளியல் நடவடிக்கைகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தியது. சிற்றூர்ப்புறங்களில் ஆட்சிமன்றங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் உறுப்பினர்கள் மக்களிலிருந்து தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தங்கள் பகுதியை ஆளும் பொறுப்பை தாங்களே ஏற்றுப் பயில எரித்திரிய மக்களுக்கு மிகுந்த முன்னுரிமை கொடுத்து செயல்பட்டது. இந்த உள்ளூர் அளவிலான வடிவங்களின் மூலமாக தம் சமூகப்பொருளியற் திட்டங்களை எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி செயற்படுத்தியது. வேளாண்துறை, போரினால் பாதிப்படைந்தவர்க்கு உதவிட மருத்துவத்துறை, நீர்மேலாண்மைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்கள் என இயக்கத்தின் நடவடிக்கைகள் பரவலாகிக் கொண்டிருந்தன. 1976 ஆம் ஆண்டில் 'சுழி பள்ளி'(Zero School) எனப்படும் தலைமறைவுப் புரட்சிகர குழந்தைகள் பள்ளி தொடங்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட விடுதலைப்பகுதிகளில் மக்கள் கற்றுக்கொண்டும் கற்பித்துக்கொண்டும் இருந்தார்கள். எழுத்தறிவற்றவர் மருத்துவ மனையில் சிகிச்சைபெறும்போதே கல்விபெறுகிறார். போராளிகள் ஓய்வுநேரத்தில் போர்க்கலையல்லாத வேறு நுட்பங்களைக் கற்கிறார்கள்.குடும்பப்பெண்கள் நவீன மருத்துவக் கருவிகளைக் கையாளப் பழகுகிறார்கள்.இவ்வாறான ஆக்கவழிப்பட்ட எரித்திரிய தேசத்தை தங்களின் விடுதலைப்பகுதிகளில் போராளிகள் உருவாக்கியிருந்தார்கள்.அப்பகுதிகளில் தக்க சட்டங்களையும் இயற்றி நடைமுறைப் படுத்தியிருந்தார்கள். பலதாரமணம், குழந்தைத் திருமணம், குழந்தைத்திருமண உறுதிப்படுத்த நிகழ்வுகள்,சமவேலைக்கு ஆண்களுக்கு சமமான ஊதியம், பெண்கள் நில உரிமை ஆகியவைகுறித்த சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தன.

விடுதலை முன்னணியின் தலைவர்கள் தங்களை மக்களிடமிருந்து உருவாகிவந்தவர்களாக அடையாளப்படுத்தினார்கள்.எரித்திரியாவிற்கு வெளியே இவர்களை இயக்கும் எந்த தொலை இயக்கிகளும் இருக்கவில்லை என்பதைத் தங்களின் தற்சார்பான நடவடிக்கைகளால் மெய்ப்பித்தார்கள்.

எரித்திரிய விடுதலை முன்னணியிலிருந்து தீர்மானகரமாக விலகிச் சென்றதற்கு எடுத்துக்காட்டாக எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி மேற்படி தற்சார்புக்கு அளித்த அழுத்தத்தைச் சொல்லலாம். போரை வெற்றிகொள்வது ஒருபுறம் எனில் தற்சார்பை விட்டுக்கொடாமல் முன்னேறுவது மறுபுறம் என மக்கள் முன்னணி தீவிரமாகச் செயலாற்றியது. மேற்படித்தற்சார்பை வலியுறுத்தி எரித்திரியாவிலும் புலம்பெயர் சமூகத்திலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தாங்கள் விடுவித்த விடுதலைப்பகுதிகளில் 9 தேசிய மொழியிலும் கல்விவழங்கப்பட ஏற்பாடுகள் செய்தனர். தம்மால் விடுவிக்கப்பட்ட விடுதலைப் பகுதிகளில் தொழிலகங்கள் நிறுவுவது, கல்விச்சாலைகள் உருவாக்குவது ஆகியவற்றில் மக்கள் முன்னணி கடும் கவனம் கொண்டு செயலாற்றியது. போரினால் காயமடைந்தவர்களுக்கு அமைக்கப்பட்ட தலைமறைவு மருத்துவமனைகள் அம்மருத்துவமனைகளுக்கென இயங்கிய மருந்துத் தயாரிப்புத் தொழி லகங்கள் என அந்நாட்களில் மக்கள் முன்னணி ஆற்றிய ஆக்கவழிப்பட்ட செயற்பாடுகள் உலகப்பு கழ்பெற்றவை. மக்கள் முன்னணி நிறுவிய தலைமறைவுத் தொழிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகளில் தயாரிக்கப்பட்ட பல பொருள்கள் உலகத்தரத்தில் இருந்தன என்பது கூடுதல் செய்தி.

## பெண்களின் பேரியக்கமாய் மக்கள் முன்னணி

மக்கள் முன்னணியின் வெற்றிக்கு ஒரு பெருங்காரணமாக இருந்தவர்கள் எரித்திரியப்பெண்களே. மொத்தப்போராளிகளில் 30 விழுக்காடுக்கும் அதிகமானோர் பெண்களே. படைகளின் தளபதிப் பொறுப்புகளில் திறம்படப்பணியாற்றிய எரித்திரியப் பெண்கள் அரசியற் களத்திலும் பெரும்பங்கேற்றனர். எரித்திரியப் பெண்களின் தேசிய ஒன்றியம் மக்கள்திரள் தளத்தில் பெண்களை பெருவாரியாகத் திரட்டிய அமைப்பாகும்.

மக்கள் முன்னணியின் தொடக்க நாட்களில் இருந்தே சமூகப் பொருளாதார அரசியல், சமவாய்ப்பு என அனைத்துப்படிநிலைகளிலும் பெண்களுக்கு வழங்கப்பட்டன.

கைடெய் என்ற முன்னால் எரித்திரிய விடுதலை முன்னணியின் உறுப்பினர் சொல்வதைக்கேட்போம் : ' என்னோடு 300 பெண்கள் உள்ள அணி அது. அனைவருக்கும் அதிகளவு23 வயது இருக்கும். எங்களுக்கு ஒரு மாதம் படைத்துறைப் பயிற்சி அளிக்கப் பட்டது. அவ்வளவே. பின் நாங்கள் ஆண்போராளிகளோடு அனுப்பப்பட்டோம்.ஆனால் நான் பின்னர் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியில் சேர்ந்தபோது 3 மாதம் எங்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. அதில் அடிப்படை அரசியல் புரிதலுக்கே முதன்மையான இடம் ஒதுக்கப்பட்டது. தோழர்கள் ஒருவருக்கொருவர் அன்புடன் பழகினர். ஒத்திசைவாய் இயங்கினர். ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. பெண்கள் ஆண்களோடு இணைந்து பணியாற்றினர். ஆண்களுக்கு தலைமை ஏற்றனர். அணிகளுக்குத் தலைமை தாங்கினர். அப்பெண்கள் வெட்கப்படவில்லை. அவர்கள் தங்கள் அடிமைச்சங்கிலிகளை உடைத்தெறிந்தார்கள்'

எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியின் மூன்றில் ஒரு பங்கு பெண்களாய் இருந்து அதன் விடுதலைக்கு அறிவையும் ஆற்றலையும் உயிரையும் வழங்கச் செய்த இயக்கத்தின் செயற்பாடுகள் அமைப்பை வேறொரு தளத்திற்கு கொண்டு சென்றன. 1970களின் தொடக்கத்தில் பெண்கள் உட்பட மக்கள் முன்னணியில் 10,000 பேருக்கும் மேற்பட்டோர் உறுப்பினர்களாக, போராளிகளாக இருந்தனர்.

## எத்தியோப்பியாவில் ஆட்சிக்கவிழ்ப்பு

எரித்திரியா தன் விடுதலைக் கனலை ஊதிஊதிப் பரப்பிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த 1970 களில் எத்தியோப்பியாவில் பேரரசர் ஹெய்ல் சேலசியின் ஆட்சியைத் தூக்கியெறிந்து ஆட்சியைப்பிடித்தது ஒரு கும்பல். 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம்நாள் பேரரசரைச் சிறைவைத்து 15ஆம்நாள் தன்னைத் தற்காலிக அரசாங்கமாக அக்கும்பல் அறிவித்துக்கொண்டது. எரித்திரியாவின் அரசியல் வானத்தில் விடிவெள்ளிகள் தோன்றக் காத்திருந்த எரித்திரியர்கள் வேறொரு பூதம் தம் எதிரியோடு கை குலுக்குவதைக் கண்டார்கள். சோவியத் ஒன்றியம்தான் அந்த பூதம். மேற்குலகின் அதிகார மையங்களில் தொடர்பையும் செல்வாக்கையும் வைத்திருந்த ஹெய்ல் சேலசிக்கு மாற்றாக புதிதாக ஆட்சியேறிய டெர்க் குழுமம் தம்மை மார்க்சியலெனினியர்களாக அடையாளம் காட்டிக்கொண்டு சோவியத் ஒன்றியத்தில் தஞ்சம் புகுந்தது. எத்தியோப்பியப் படைத்துறை அதிகாரிகளை மார்க்சிய லெனினியர்களாகப் பார்க்கும் அளவுக்கு சோவியத் ஒன்றியமும் 1970களில் சீரழிந்து கிடந்ததால் சேறும் சகதியும் ஒன்றாயின.

இதுவரை மேற்குலகின் படைக்கருவிகளைப் பயன்படுத்திய எத்தியோப்பியப் போர்வெறி தற்போது சோவியத்தின் செம்படையினரிடமிருந்து கருவிகளைப் பெறத் தொடங்கியது. ஆயினும் மேற்குலகின் பொருளுதவி அதன் உச்சத்தை எட்டியது டெர்க் காலத்தில்தான். பனிப்போர் பேரரசுகளால் உதைக்கப்பட்ட கால்பந்து எரித்திரியா எனில் அது சிறிதும் மிகையில்லை. கிழக்காப்பிரிக்கப் பகுதியில் எத்தியோப்பியா தனது பனிப்போர் விளையாட்டுகளுக்கு நல்லதொரு தங்குதளமாக இருக்கும் எனக் கருதிய சோவியத் ஒன்றியமானது டெர்க் அரசு தன்னை சமவுடைமை அணியில் இணைத்துக்கொண்ட மூன்று மாதங்களில் 50 கப்பல்களில் கொணர்ந்து 60,000 டன் எடையளவு கன ரக படைக்கருவிகளை கசப் துறைமுகத்தில் இறக்கி அப்போது நடந்துகொண்டிருந்த ஒகடன் போர்முனைக்கு (எத்தியோப்பிய-சோமாலியா போர் நடந்துகொண்டிருந்த பகுதி)அனுப்பப்பட்டது. அதைத்தொடர்ந்து எரித்திரியச் சிக்கலை படைவழித் தீர்க்கவும் உதவி உறுதிசெய்யப்பட்டது.

அதன் வெளிப்பாடாக சோவியத் ஒன்றியமும் டெர்க் அரசும் 1978 ஆம் ஆண்டு இருபதாண்டு நட்புணர்வு மற்றும் கூட்டுறவு உடன்படிக்கை செய்துகொண்டன. இது அடிப்படையில் படையியல் உதவியை உறுதி செய்த ஒப்பந்தமன்றி வேறில்லை. அதன் பின் சோவியத் ஒன்றியம் கலைந்துபோகும்வரை 13 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள உதவி எத்தியோப்பியாவுக்கு அளிக்கப்பட்டது.

1960 களில் எரித்திரிய விடுதலைப்போராட்டத்தை ஆறத்தழுவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்ற மதிப்பிற்குரிய கியுபாவும் மாட்சிமைக்குரிய காஸ்ட்ரோவும் எத்தியோப்பிய மண்ணில் சோவியத் ஒன்றியத்தின் மேலான தோழமையின் பேரில் படையியல் அறிவுரைப் பணியை ஆற்றியதையும் வரலாறு துயரத்தோடு பதிவுசெய்துள்ளது.

## டெர்க்கின் உத்திகள்

டெர்க் அரசு எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியை 'கொள்ளையர்களின் கூட்டம்' என்றழைத்ததன் மூலம் பேச்சுரைக்கான கதவுகளை முற்றாக அடைத்து போர்முனையைத்திறந்துவிட்டார். ஒகடென் போர்முனைக்கு சோவியத் ஒன்றியத்தைப் பயன்படுத்திய டெர்க் அதன் தொடர்ச்சியாக எரித்திரியாவை படையியல் முறையில் ஒழித்துக்கட்ட சோவியத் ஒன்றியத்தை முழுமையாகச் சார்ந்திருந்தது. முன்பு ஹெய்ல் சேலசி எரித்திரியச் சிக்கல் இருப்பதையே மறுத்துவந்ததை விடுத்து டெர்க் அரசு எரித்திரியாமீது நேரடியாக போர் முழக்கமிட்டது சோவியத்தின் மிக் வானூர்திகள், இஸ்ரேலின் கொத்துகுண்டுகள், நாபாம்கள் ஆகியவற்றின் துணையோடு கணக்கின்றி எரித்தியர்களைக் கொன்றுவீசின. இதில் நகரம், சிற்றூர் என்ற வேற்றுமையில்லை. போராளிகளுக்கு அடைக்கலம் கொடுத்த எரித்திரிய தேசத்துக் காடுகளும் பேரளவு அழிக்கப்பட்டன. வீடுவீடாகப்புகுந்த எத்தியோப்பிய படையினர் எல்லா ஆக்கிரமிப்புப் படையைப்போலவே சிறுமிகள் முதற்கொண்டு வயது வேறுபாடின்றி எரித்திரியப்பெண்களை பால்வன்முறைக்கு ஆளாக்கினர். வீடுவீடாகக் கொள்ளையடித்தனர்.

டெர்க் கால கொடுமைகள் இதுவரைகால ஆதிக்கர்களின் செயற்பாடுகளையும் விஞ்சி நின்றது. உலகின் மன்றமென நிமிர்ந்து நிற்கின்ற 'தேசங்களின் ஒன்றியம்' தொடர்ந்து அமைதி காத்தது. எரித்திரிய விடுதலைப்போரில் எத்தியோப்பியாவை விட மோசமாக நடந்து கொண்டது உலக சமூகமே.

## இயக்கங்களிடேயே மோதல்

எரித்திரிய வரலாற்றில் இருபெரும் மோதல்கள் விடுதலை இயக்கங்கள் இடையே நிகழ்ந்தன. முதல் மோதல் 1972 இல் தொடங்கியது. இதில் அண்மையில் கருக்கொண்டிருந்த எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியும் பெரும் இயக்கமாகக் களத்தில் நின்றிருந்த எரித்திரிய விடுதலை முன்னணியும் மோதிக்கொண்டன. மோதல் எரித்திரியாவின் பல்வேறு பகுதிகளில் பரவி 1974 ஆம் ஆண்டு நின்றுபோனது. எத்தியோப்பியாவில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பத்தினை எரித்திரிய விடுதலைக்கான வாய்ப்பாகக் கருதி ஆயிரம் முரண்கள் புகைந்த போதும் மோதல் நிறுத்தப்பட்டது. இதன்பின் 1980-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81 ஆண்டுகளில் இரண்டாம் மோதலில் எரித்திரிய விடுதலை முன்னணி முற்றிலும் முறியடிக்கப்பட்டு எரித்திரிய தேசத்திற்கு வெளியே துரத்தப்பட்டது. 1970 இல் தொடங்கப்பட்ட மக்கள் முன்னணி இப்போது எரித்திரிய தேசத்தின் தனிப்பெரும் ஒரே போராளி அமைப்பாக களத்தில் நின்றது.

இயக்கங்களில் பல்வேறுவகையான பிளவுகள், மாற்றங்கள், புதிய இயக்கங்களின் தோற்றம் என எரித்திரிய வரலாற்றில் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டடே இருந்தன. ஒரு பன்முகப்பட்ட சமூகத்தில் இது இயல்பானதே. ஆனால் இப்பிளவுகள் எல்லா நேரங்களிலும் வளர்ச்சிநோக்கிய மாற்றங்களாக இருப்பதில்லை. அப்படியான பொழுதுகளில் அப்பிளவுகளால் எழுந்த இயக்கங்கள் நிலைகொள்ள இயலாமல் விரைவில் உதிர்ந்துவிடுகின்றன. வழக்கமான ஆப்பிரிக்க குலச்சண்டைகளாக மேற்கண்ட மோதல்களை வகைப்படுத்தமுடியாத வகையில் இயக்கங்களின் மெய்யியல் வேறுபாடுகள் எதிரெதிர் நிலையில் நிலவின. இத்தகைய நிலைமைகளில் கருவியேந்திய இயக்கத்தின் உட்சிக்கல் கருவியினாலேயே தீர்க்கப்படுகிறது. இதற்கு எரித்திரியாவும் விதிவிலக்கல்ல. மேற்படி மோதல்களில் 3000 போராளிகள் வரை உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்பட்டாலும் அன்றைய போர்மேகம் சூழ்ந்திருந்த எரித்திரியாவில் இந்த எண்ணிக்கை மிக அதிகமானதாகவே இருந்திருக்க முடியும் என்றும் கருதப்படுகிறது.

## ஆதிக்க சோவியத் ஆட்டம் காணும் நேரம்

1977இல் பலவெற்றிகளைப்பெற்று பல நகரங்களை மக்கள் முன்னணி மீட்டு விடுதலைப்பகுதியாக ஆக்கியது. ஆனால் 1978 ஆம் ஆண்டு மிகப் பரந்த அளவிலும் வீச்சான முறையிலும் டெர்க் அரசின் படைகள் சோவியத் ஒன்றியத்தின் பேரழிவுப் படைத்தளவாடங்களை போரில் இறக்கியபோது நகரங்களைக் கைவிட்டு பின்வாங்கவேண்டிய போர் உத்தியை மக்கள் முன்னணி எடுத்தது. டாங்கிளும் பீரங்கிகளும் மக்கள்படையும் வைத்திருந்த போதிலும் மக்கள் முன்னணி பின்வாங்கிச் சென்ற அந்த நிகழ்வு இழப்புகளைக் குறைத்துக்கொண்டு 1980களின் இறுதியில் பெற்ற இமாலாய வெற்றிகளைப் பெற உதவியது.

உள்ளே செல்லரித்துக்கொண்டிருந்த சோவியத் ஒன்றியம் 1985ஆம் ஆண்டு கோர்ப்பசேவை இருக்கையில் அமர்த்தியபோது எரித்திரியா குறித்த அதன் நிலைப்பாடு மாறுவது தெளிவானது. இனியும் எரித்திரி யாவுக்கு எதிராக எத்தியோப்பியாவுக்கு படைத்தளவாடங்கள் வழங்க சோவியத்திற்கு எண்ணமில்லை. சோவியத் ஒன்றியம் சிதறிப்போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தியோப்பிய அரசின் படையியல் உதவிகள் முடிவுக்கு வந்தன.

## எதிரியின் குகைக்குள் புரட்சியின் வாடை

எத்தியோப்பியாவின் போர்க்குணம்மிக்க மக்கள் தங்களுக்கான சமூக மாற்ற இயக்கத்தினை 1975 இல் கண்டனர். டிக்ரியன் பல்கலைக்கழக மாணவர்கள் 7பேர் கொண்ட கருக்குழுவால் தொடங்கப்பட்ட டிக்ரியன் மக்கள் விடுதலை முன்னணி எத்தியோப்பியாவின் டெர்க் ஆட்சியை முடிவுக்கு கொணர்ந்து சமவுடமை அரசை நிறுவும் முகமாகத்தொடங்கப்பட்டு எத்தியோப்பிய மக்களின் பெரும்பங்கேற் போடு வளரத்துவியது அடுத்தடுத்த ஆண்டுகளில் தனக்கான படைப்பிரிவினையும் உருவாக்கியது. எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியின் தோழமையுடனும் அனைத்துவகையான உதவிகளையும் கொண்டிருந்தது. பல படைத்தாக்குதல்களை டிக்ரியன் இயக்கமும் மக்கள் முன்னணியும் இணைந்து நடத்தின. 1991 இல் எத்தியோப்பிய அரசைக் கைப்பற்றியது.

## எரித்திரியப் போர்க்களங்கள் ஒரு பார்வை

எரித்திரிய விடுதலைப் போர்க்களத்தில் ஈழப்புலிகளை நினைவூட்டக்கூடிய வீரப்போர்கள் பல உண்டு. பானை சோற்றுக்கு பதம் எனும் வகையில் இங்கே ஓரிரு களங்களைப் பார்க்கலாம்.

## வீழ்ந்தது மசாவா

எரித்திரியாவின் துறைமுக நகரான மசாவா போரியல் முக்கியத்துவம் பெற்ற நகராகும். எத்தியோப்பியப் படைகளுக்குத் தேவையானவை அனைத்தும் இங்கு வந்து இறங்குவது வழக்கம். 1990 களில் பிப்ரவரி 8ஆம் நாள் நிலவழியிலும் கடல்வழியிலும் மக்கள் முன்னணி தாக்குதல் தொடங்கியது. சீட்டுக்கட்டைப்போலச் சரிந்த எத்தியோப்பிய போரணிகளைத் தொடர்ந்து மசாவாவைச் சுற்றுப்புறங்கள் முன்னணியிடம் வீழ்ந்தன. மூன்றாம் நாள் மீதமிருந்த எத்தியோப்பியப் படைகளுக்கு அருகிலிருந்த சிறு தீவுகளைத்தவிர தப்பிப்பிழைக்க வழியில்லை. சிறிய பீரங்கிப் படகுகளோடு கடல்வழித்தாக்கிய எரித்தியர்கள் கொத்துக்கொண்டுகளையும் நாபாம்களையும் அங்குலம் அங்குலமாகத்தூவிச்சென்ற எத்தியோப்பிய போர்வானூர்திகளையும் தாண்டி இவ்வெற்றியை அடைந்தனர். 1977 ஆம் ஆண்டு சோவியத்தின் கொடூரமான தளவாடங்களினால் போராளிகள் பின்வாங்கிச்சென்ற அதே தளம் தான் இது என்பது குறிப்பிடத்தக்கது.

அஸ்மாரா வானூர்தி நிலையத்தில் 1984 ஆம் ஆண்டு மக்கள் முன்னணி ஒரு மாபெரும் தாக்குதலை நடத்தியது. எரித்திரியாவை விடுதலைத் தேசமாக மலர்த்தியதில் அந்தத் தாக்குதலுக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட பங்குண்டு எனச் சொன்னால் அது மிகையில்லை. அந்தத் தாக்குதலில் 26 மிக்21 மற்றும் மிக் 23 வகை வானூர்திகள், 5 உலங்குவானூர்திகள், 1 படைத்துறை போக்குவரத்து வானூர்தி என 30 க்கும் மேற்பட்ட வானூர்திகள் தாக்கி அழிக்கப்பட்டன. இதன்மூலம் தலைநகருக்கான வெளித்தொடர்புகள் வழி படைக்கருவிகள் இன்னபிற பொருள்கள் கொணரும் வழியை துண்டித்தனர்.

அலையலையாய் திரண்ட எரித்திரியப் போராளிகளின் தாங்குதல் 1988-89களில் உக்கிரமடைந்தது. முன்பு எத்தியோப்பியப்படையிடம் கெரில்லாப்போர்முறையில் மோதிக்கொண்டிருந்த மக்கள் முன்னணி இப்போது மரபுசார் படையாக களத்தில் இறங்கி தாக்குதல் போர்களை நடத்தி முன்னேறியது. எத்தியோப்பிய படைகள் தற்காப்புப் போரையும் நடத்த வலுவற்றுப்போயின.

1991இல் தலைநகரான அஸ்மாரா வீழ்ந்தது. எரித்திரிய விடுதலைப்போராளிகள் நகரைக் கைப்பற்ற, அதுவரை எத்தியோப்பிய நுகத்தடியிலிருந்த அந்நகரமக்கள் வீதிகளில் இறங்கிகொண்டாடிய காட்சி நம் மெல்லிய மனப்பரப்பில் தேன்தடவுகிறது. இதே காலகட்டத்தில் எதிரியின் தேசத்தில் எரித்திரியா விடுதலை இயக்கத்தின் தோழர்கள் ஆட்சிக்கு வந்தனர் டெர்க் அரசின் தலைவரான மெங்கிஸ்டு 1991ஆம் ஆண்டு எத்தியோப்பிய இயக்கங்கள் மற்றும் மக்கள் எழுச்சிக்கு அஞ்சி ஜிம்பாவேக்கு ஓடிப்போனார். அதைத்தொடர்ந்து டிக்ரெயன்



**எரித்திரியா பிரிந்துசெல்ல வாக்களிக்கிறார் இசயாஸ் அப்வெர்கி**

மக்கள் விடுதலை முன்னணி, எத்தியோப்பிய மக்கள் சனநாயக முன்னணி, எத்தியோப்பிய மக்கள்புரட்சிகர சனநாயக முன்னணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவை இணைந்த கூட்டணி எத்தியோப்பிய அரசைக் கைப்பற்றியது. பழம் நழுவியது. பாலிலும் விழுந்தது.

## போர் முடிந்தது போர் தொடங்கியது

எரித்திரிய மக்கள் படைவழி நடத்திய போர் 1991 மே24 ஆம் நாள் தலைநகர் அஸ்மாராவைக் கைப்பற்றியதோடு முடிவுக்கு வந்தது. அடுத்ததாக, துவக்குப்போரைவிடக் கடினமான ராசதந்திரப் போர்

**எரித்திரிய பகுதிகளின் வாக்குப்பதிவு அளவீடுகள்**

| Area | Total | Yes | No | Invalid | % Yes |
|---|---|---|---|---|---|
| Asmara | 128,620 | 128,443 | 144 | 33 | 99.86 |
| Barka | 44,472 | 44,425 | 47 | 0 | 99.89 |
| Denkalia | 26,027 | 25,907 | 91 | 29 | 99.54 |
| Gash-Setit | 73,506 | 73,236 | 270 | 0 | 99.63 |
| Hamasien | 76,716 | 76,654 | 59 | 3 | 99.92 |
| Akele Guzai | 92,634 | 92,465 | 147 | 22 | 99.82 |
| Sahel | 51,187 | 51,015 | 141 | 31 | 99.66 |
| Semhar | 33,750 | 33,596 | 113 | 41 | 99.54 |
| Seraye | 124,809 | 124,725 | 72 | 12 | 99.93 |
| Senhit | 78,540 | 78,513 | 26 | 1 | 99.97 |
| Fighters | 77,579 | 77,512 | 21 | 46 | 99.91 |
| Sudan | 154,058 | 153,706 | 352 | 0 | 99.77 |
| Ethiopia | 57,706 | 57,466 | 204 | 36 | 99.58 |
| Other Countries | 82,806 | 82,597 | 135 | 74 | 99.75 |
| **Total** | **1,102,410** | **1,100,260** | **1,822** | **328** | **99.81** |

தொடங்கியது.உலகம் எனும் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கிற வேடிக்கை விளையாட்டாக இது பலநேரம் அமைவதில்லை. தேசம் என்பது வெறும் படைகளால் வெல்லப்பட்டு வேலிகட்டப்படும் நிலப்பரப்பல்ல. அது ஒரு சமூகம் எழுந்து நின்று தனக்கென அரசை நிறுவி அதன் வழி தம்மைத்தாமே தீர்மானித்துக்கொள்ளும் ஏற்பாடு. அந்தவகையில் நிலவும் பிற தேசங்களின் ஏற்பிசைவே இங்கு முதன்மையானது.அந்த ஏற்பிசைவு இல்லையெனில் என்னதான் ஓர் இயக்கம் தேசத்தைப் படைகொண்டு கைப்பற்றினாலும் அது நடைமுறை அரசு (De facto state) என்ற நிலையிலிருந்து சட்டமுறை அரசு (De jure state) என்ற நிலைக்கு வளர்ந்து செல்ல, மாறிச் செல்ல முடியாது. அந்தப்புரிதலும் பட்டறிவும் நிரம்பப்பெற்ற மக்கள் முன்னணி அடிகளை அளந்துவைத்து நடக்கத்தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைக்கால அரசு அமைந்தது

*1991 மே27 ஆம்நாள்* எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி இடைக்கால அரசை அமைத்து அதன் தலைவராக *1966*ஆம் ஆண்டு எரித்திரிய விடுதலை முன்னணியில் இணைந்து பின் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியின் இன்றியமையாப் பொறுப்புகளில் இருந்து எரித்திரிய போராளிகளின் மதிப்பையும் எரித்திரிய மக்களின் அன்பையும் பெற்ற மேதகு இசையஸ் அஃபெர்கி அவர்களைத் தேர்ந்தெடுத்தது. எரித்திரிய மக்களிடம் சனநாயகவழிப்பட்ட கருத்து வாக்கெடுப்பு நடத்த தேசங்களின் ஒன்றியத்திடம் கோரிக்கை விடுத்தது. பல்வேறு நாடுகளுடன் ராசதந்திர நகர்வுகளை மேற்கொண்டது. முதற்கட்டமாக எத்தியோப்பியாவில் எத்தியோப்பிய மக்கள் புரட்சிகர சனநாயக முன்னணி தலைநகரான அடிஸ் அபாபாவில் *28* கட்சிகளை ஒருங்கிணைத்து மாநாடு கூட்டியது.அதில் எரித்திரிய விடுதலையை ஆதரித்தும் அனைத்துலக மேற்பார்வையில் எரித்திரிய கருத்து வாக்கெடுப்பு நட த்துவதை ஆதரித்தும் தீர்மானம் நிறைவேற்றியது.

தேசங்களின் ஒன்றியம் *1992* ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தனது பொது அவையில் எரித்திரிய கருத்துவாக்கெடுப்பில் தனது பங்கேற்பை உறுதி செய்து தீர்மானம் நிறைவேற்றியது.



எரித்திரிய இடைக்கால அரசு கருத்துவாக்கெடுப்புக்கான ஏற்பாடுகளை செய்த்து. முதலில் வாக்களார்களை பதிவுசெய்தல், பின் பதிவைச் சரிபார்த்தல் அமைதியான குறுக்கீடில்லா தேர்தலுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது என வேலைகள் தொடர்ந்தன.

தேசங்களின் ஒன்றியத்தின் எரித்திரிய கருத்துவாக்கெடுப்பு கண்காணிப்புக்குழு தன் *120* உறுப்பினர்களுடன் எரித்திரியா வந்து சேர்ந்து செய்திருந்த ஏற்பாடுகளைப்பார்த்து மன நிறைவு பெற்றது. தேர்தல் ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இறுதியில் *1993* ஏப்ரல்*23,24,25* ஆகிய நாள்களில் கருத்துவாக்கெடுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தப்பட்டது. எரித்திரியா மட்டுமின்றி புலம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழ்ந்துவந்த எரித்தியர்களிடமெல்லாம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தேசங்களின் ஒன்றியக் குழுவின் தலைவர் 'கருத்துவாக்கெடுப்பு முழுமையாக அமைதியாகவும் எந்த குறுக்கீடும் வற்புறுத்தலும் இன்றி நடந்தமுறையில் நான் முழுக்க மனநிறைவு பெறுகிறேன்' என சொன்னதை இங்கு நினைவு கூர்வோம். 98.52 விழுக்காடு எரித்திரியவிடுதலையை ஆதரித்து வாக்குகள் அளிக்கப் பட்டதாக அறிவிக்கபட்டது.

இவ்வறிவிப்பைத்தொடர்ந்து எத்தியோப்பியா உள்ளிட்டு பல தேசங்கள் எரித்திரியாவை தேசமாக ஏற்று தூதரக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளத் தங்கள் விருப்பங் களைத் தெரிவித்தன. எரித்திரியா 1993 ஏப்ரல் 27 ஆம் நாள் கருத்து வாக் கெடுப்பு.நிகழ்த்திய மறுகணமே விடுதலை உறுதிசெய்யப்பட்டாலும் மே 24 ஆம்தேதி அதிகாரப்பூர்வமாக விடுதலைபெற்றதாக அறிவிக்கப்பட்ட அந்த நாளே எரித்திரிய விடுதலைத் திருநாளாக கொண்டாடப்படுகிறது.

## வலியும் துயரும் கேள்விகளும்

முப்பதாண்டு காலப்போர் அதில் 60,000 களப்பலி, 90,000 அனாதைக் குழந்தை கள்,உடல்ஊனமுற்ற 10,000 போராளிகள், வலுக்கட்டாயமாக நிகழ்த்தப்பட்ட பெருந்தொகையான மக்களின் புலப்பெயர்வு, குறிப்பிட்ட இடைவெளியில் திரும்பத்திரும்ப வந்த பஞ்சம், துடைத்தெறியப்பட்ட தொழிற்துறை, முடமாக்கப்பட்டு இருட்டறையில் கிடத்தப்பட்ட தேசியப் பொருளியல் என விடுதலை எரித்திரியச் சிக்கல்கள் ஒன்றிரண்டல்ல. கூடுதலாகப் பெண் போராளிகள் விடுதலைக்குப் பின் சாதாரண வாழ்க்கையில் புகுகையில் இன்னும் மீதமிருக்கிற நிலக்கிழமைப்பண்பாட்டின் மிதிபாடுகள் போன்ற பண்பாட்டு சமூகச் சிக்கல்கள்.

1980களின் பிற்பகுதியில் மார்க்சிய லெனினியத்தை விட்டு விலகுவதை அறிவித்து இன்று விடுதலை பெற்ற எரித்திரியா திறந்த பொருளியல், கொள்ளைச் சந்தை போன்றவற்றை அனுமதித்துக் கொண்டே மக்களை எப்படி முன்னேற்றப் போகிறது எனும் கேள்விகள் மொய்க்கின்றன. பிரடெரிக் டக்ளஸ் சொன்னதைப்போல போராட்டமின்றி முன்னேற்றமில்லை. வீரஞ்செறிந்த எரித்திரிய மக்கள் போராடுவார்கள், முன்னேறுவார்கள். விடுதலை பெற்ற எரித்திரியாவிலும்.

-------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தியோப்பியப் படைத்துறை அதிகாரிகளை மார்க்சிய லெனினியர்களாகப் பார்க்கும் அளவுக்கு சோவியத் ஒன்றியமும் 1970களில் சீரழிந்து கிடந்ததால் சேறும் சகதியும் ஒன்றாயின. இதுவரை மேற்குலகின் படைக்கருவிகளைப் பயன்படுத்திய எத்தியோப்பியப் போர்வெறி தற்போது சோவியத்தின் செம்படையின் கருவிகளைப் பெறத் தொடங்கியது.

மதிப்பிற்குரிய கியுபாவும் மாட்சிமைக்குரிய காஸ்ட்ரோவும் எத்தியோப்பிய மண்ணில் சோவியத் ஒன்றியத்தின் மேலான தோழமையின் பேரில் படையியல் அறிவுரைப் பணியை ஆற்றியதையும் வரலாறு துயரத்தோடு பதிவுசெய்துள்ளது.



முள்ளி வாய்க்கால்
பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org